பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

07 02 2025 12 40
வெள்ளிக்கிழமை பிற்பகல்

தலைப்புச் செய்திகள்

1. மத்திய பட்ஜெட் மீதான விவாதம் இன்று மக்களவையில் தொடங்கியது.
2. வங்கிகளுக்கான குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் பூஜ்யம் புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.
3. நாட்டில் வனப்பரப்பை அதிகரிக்க அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் நிதி உதவி அளித்து வருவதாக மத்திய இணை அமைச்சர் திரு கீர்த்தி வரதன் சிங் தெரிவித்துள்ளார்.
4. திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி – கருமேனி ஆறு – நம்பியாறு இணைப்பு மற்றும் வெள்ளநீர் கால்வாய் திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.
5. சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இன்று ஜப்பான் இணையை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

மத்திய பட்ஜெட் மீதான விவாதம் இன்று மக்களவையில் தொடங்கியது.

மத்திய அரசின் வரும் நிதி ஆண்டிற்கான பட்ஜெட்டை நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கடந்த ஒன்றாம் தேதி நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தார்.

இந்த பட்ஜெட் மீதான விவாதம் மக்களவையில் தற்போது நடைபெற்று வருகிறது.

பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்களும் இதில் பங்கேற்று பேசி வருகின்றனர்.

[]<<<>>>[]

நாட்டின் பாதுகாப்பு பணிகளுக்கு முன்னுரிமை அளித்து இந்திய பாதுகாப்பு கணக்குப் பணி அதிகாரிகள் செயல்பட வேண்டுமென குடியரசுத் துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் கேட்டுக் கொண்டுள்ளார்.

புதுதில்லியில் தம்மை சந்தித்த பாதுகாப்பு கணக்கு பயிற்சி அதிகாரிகளிடையே பேசிய அவர், சிக்கன நடவடிக்கைகள் செயல்பாட்டுத் திறனில் சமரசம் செய்து கொள்வதாக அமைந்துவிடக் கூடாது என்று வலியுறுத்தினார்.

முன்னாள் ராணுவத்தினருக்கான ஓய்வூதியம் எளிதில் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் திரு ஜக்தீப் தன்கர் அறிவுறுத்தினார்.

**[]<<<>>>[]**

வங்கிகளுக்கான குறுகிய கால கடனுக்கான ரெப்போ வட்டி விகிதம் பூஜ்யம் புள்ளி இரண்டு ஐந்து சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

மும்பையில் நடைபெற்ற ரிசர்வ் வங்கியின் நிதிக் கொள்கைக் குழுக் கூட்டத்தின் முடிவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு சஞ்ஜய் மல்கோத்ரா, ரெப்போ வட்டி விகிதம் ஆறு புள்ளி ஐந்து சதவீதத்திலிருந்து ஆறு புள்ளி இரண்டு ஐந்து சதவீதமாக குறைக்கப்படும் என்று கூறினார்.

ஐந்து ஆண்டுகளுக்குப் பின் இந்த வட்டி குறைப்பு மேற்கொள்ளப் பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

வரும் நிதி ஆண்டில் நாட்டின் பொருளாதார வளர்ச்சி ஆறு புள்ளி ஐந்து சதவீதத்திலிருந்து ஏழு சதவீதம் வரை அதிகரிக்கக்கூடும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மொத்த உள்நாட்டு உற்பத்தி 2026-ஆம் ஆண்டில் ஆறு புள்ளி ஏழு சதவீமாகவும், பணவீக்கம் தொடர்ந்து நான்கு புள்ளி இரண்டு சதவீதமாக இருக்கும் என்றும் திரு சஞ்ஜய் மல்கோத்ரா தெரிவித்தார்.

ரிசர்வ் வங்கியின் வட்டி குறைப்பு நடவடிக்கைகள் காரணமாக வீடு மற்றும் வாகனக் கடனுக்கான மாதாந்திர தவணைத் தொகையில் ஒன்று புள்ளி எட்டு சதவீதம் அளவு வரை குறையக்கூடும் என்று பொருளாதார வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

**[]<<<>>>[]**

பண்டிட் தீன்தயாள் உபாத்தியாயா தேசிய நலத்திட்டத்தின் கீழ் விளையாட்டு வீரர்களுக்கு நிதி உதவி வழங்கப்பட்டு வருவதாக மத்திய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இத்திட்டத்தின் கீழ் பயிற்சி, விளையாட்டு உபகரணங்கள் வாங்குதல், போட்டிகளில் பங்கேற்பதற்கான செலவு மற்றும் காயமடையும் வீரர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கும் நிதிஉதவி வழங்கப்படுவதாகக் கூறினார்.

குறைந்தது இரண்டு லட்சம் ரூபாய் முதல் பத்து லட்சம் ரூபாய் வரை நிதி உதவி அளிக்கப்படுவதாகவும் திரு மன்சுக் மாண்டவியா தெரிவித்தார்.

[]<<<>>>[]

நாட்டில் வனப்பரப்பை அதிகரிக்க மத்திய அரசு பல்வேறு திட்டங்களின் கீழ் நிதிஉதவி அளித்து வருவதாக மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வரதன் சிங் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் இதனைத் தெரிவித்த அவர், பசுமை இந்தியாவுக்கான தேசிய இயக்கம், வன உயிரின வாழ்விட மேம்பாடு, காடு வளர்ப்பு நிதியம், நகர்புற காடுகள் திட்டம் போன்றவற்றின் மூலம் மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுவதாகக் கூறினார்.

இந்த நிதி உதவியின் மூலம் காடுகளுக்கு உள்ளேயும் வெளியேயும் மரக்கன்றுகள் நடப்படுவதுடன், மண்வள பாதுகாப்பு மற்றும் தண்ணீர் சேமிப்பு திட்டங்கள் செயல்படுத்தப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அன்னையின் பெயரில் ஒரு மரக்கன்று நடும் திட்டத்திட்டத்தின்கீழ் கடந்த ஜனவரி மாதம் இறுதி வரை 109 கோடி மரக்கன்றுகள் நடப்பட்டிருப்பதாகவும் திரு கீர்த்தி வரதன் சிங் தெரிவித்தார்.

[]<<<>>>[]

மூலிகைப் பயிரான தண்ணீர் விட்டான் கிழங்கின் மகத்துவம் குறித்து மக்களுக்கு எடுத்துரைக்கும் வகையில் பிரச்சார இயக்கம் மேற்கொள்ளப்படும் என ஆயூஷ் துறை இணை அமைச்சர் திரு பிரதாப் ராவ் ஜாதவ் தெரிவித்துள்ளார்,

புதுதில்லியில் தண்ணீர் விட்டான் கிழங்கின் மருத்துவ குணங்கள் குறித்து ‘சிறந்த ஆரோக்கியத்திற்கு சதாவாரி’ என்ற தலைப்பிலான பிரச்சார இயக்கத்தை நேற்று அமைச்சர் தொடங்கி வைத்தார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பிரதமர் திரு நரேந்திரமோடி கடந்த 2022-ஆம் ஆண்டு சுதந்திரதின உரையில் அறிவித்த பஞ்ச பூராண குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறினார்.

ஆயூஷ் மருத்துவம் கடந்த பத்து ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளதாக கூறிய அவர், தேசிய மருத்துவ தாவர வாரியத்தின் செயல்பாடுகளுக்கும் பாராட்டு தெரிவித்தார்.

ஏற்கனவே நெல்லிக்காய் மற்றும் முருங்கையின் மகத்துவம் குறித்து மேற்கொள்ளப்பட்ட பிரச்சாரங்கள் நல்ல பலனை அளித்திருப்பதாகவும் திரு பிராதாப் ராவ் ஜாதவ் குறிப்பிட்டார்.

**[]<<<>>>[]**

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்…

(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)

உத்தரப்பிரதேசத்தின் பிரயாக்ராஜில் நடைபெற்று வரும் மகா கும்பமேளாவின் 26-வது நாளான இன்றும் லட்சக்கணக்கானோர் திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வருகின்றனர்.

குஜராத் முதலமைச்சர் திரு. பூபேந்திர பட்டேல் இன்று திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி வழிபட்டார்.

இதனிடையே கும்பமேளாவுக்கு வரும் பக்தர்களை மகிழ்விக்கும் வகையில் மத்திய கலாச்சார அமைச்சகத்தின் சார்பில் இன்று பிரமாண்ட கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அங்குள்ள கங்கா பந்தலில் நடைபெறும் நிகழ்ச்சியில், திரைப்பட பாடகர் ஹரிகரன், பிரபல ஒடிஸி நடன கலைஞர் சோனல் மான்சிங், டோனா கங்குலி, பாடகி கவிதா கிருஷ்ணமூர்த்தி உள்ளிட்டோர் பங்கேற்கும் இசை நடனம் மற்றும் கலை நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(சவுண்ட் பைட் - **Song** – 8 நொடிகள்)*

[]<<<>>>[]

திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி – கருமேனி ஆறு – நம்பியாறு இணைப்பு மற்றும் வெள்ளநீர் கால்வாய் திட்டத்தை முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் இன்று தொடங்கி வைத்தார்.

திருநெல்வேலியில் நடைபெற்ற அரசு விழாவில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசிய அவர், இந்த திட்டம் சுமார் ஆயிரத்து 60 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

பாளையங்கோட்டையில் ரயில்வே மேம்பாலம் கட்டப்படும் என்பது உள்ளிட்ட அறிவிப்புகளையும் திரு மு க ஸ்டாலின் வெளியிட்டார்.

*( சவுண்ட்பைட் - மு க ஸ்டாலின் ) ---50 செகண்ட்*

பொருநை அருங்காட்சியகப் பணிகள் வரும் ஏப்ரல் மாதத்திற்குள் நிறைவடையும் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீரில் பணியாற்றும் மத்திய ரிசர்வ் காவல்படை வீரர்கள் முழு அர்ப்பணிப்புடன் பணி புரிய வேண்டுமென அந்த படைப் பிரிவின் தலைமை இயக்குநர் திரு ஜி பி சிங் வலியுறுத்தியுள்ளார்.

ரஜோரி மாவட்டத்திற்கு உட்பட்ட எல்லைப்புற பகுதிகளில் உள்ள

சி ஆர் பி எப் முகாம்களை பார்வையிட்ட அவர், வீரர்களிடையே உரையாடினார்.

கடினமான இயற்கை சூழலில் பணியாற்றும் வீரர்கள் தங்களது ஆரோக்கியமான வாழ்க்கை மற்றும் சிறப்பான பணி ஆகியவற்றுக்கு இடையே சம நிலையை பின்பற்ற வேண்டியதன் அவசியத்தை அவர் எடுத்துரைத்தார்.

[]<<<>>>[]

பங்ளாதேஷின் தந்தை என்று அழைக்கப்படும் ஷேக் முஜிபுர் ரஹ்மான் நினைவு இல்லம் சேதப்படுத்தப்பட்டதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால், வரலாற்றின் அடையாளமாகத் திகழ்ந்த அந்த இல்லம் சேதப்படுத்தப்பட்டது மிகவும் வருத்தம் அளிப்பதாக உள்ளது என்று கூறினார்.

அந்த இல்லம் பங்ளாதேஷ் சுதந்திரப் போராட்டத்தின் அடையாளமாக திகழ்ந்த இடம் என்று குறிப்பிட்ட அவர், பங்ளாதேஷ் போராட்டக்காரர்களின் செயலை இந்தியா வன்மையாக கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

**[]<<<>>>[]**

2026-ஆம் ஆண்டில் அமெரிக்காவின் எச்-ஒன்-பி விசா பெறுவதற்கு அடுத்த மாதம் ஏழாம் தேதி முதல் 24-ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பிக்குமாறு அந்நாட்டின் குடியுரிமை மற்றும் குடியேற்ற சேவைகள் துறை அறிவித்துள்ளது.

**USCIS** என்ற இணையதளத்தில் ஒவ்வொரு விண்ணப்பதாரருக்கும் தனித்தனியாக கட்டணம் செலுத்தி விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு அரை இறுதி ஆட்டத்தின் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் - விஜய் சுந்தர் பிரசாந்த் இணை இன்று ஜப்பான் இணையை எதிர்கொள்கிறது.

மற்றொரு அரை இறுதி ஆட்டத்தில் இந்தியாவின் ராம்குமார் ராமநாதன் - சாகேத் மைனேனி இணை தைவானின் **Ray ho** - ஆஸ்திரேலியாவின் மாத்யூ கிறிஸ்டோபர் இணையை எதிர்கொள்கிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்துப் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி – மும்பை அணியை எதிர்கொள்கிறது.